DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :150/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -1 (LW -1)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திருமதி.தமிழரசி** | Caste | : | |
| Husband Name | : | **திரு.கார்த்திக்** | Calling | : | **கி.நி.அ** |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **03.07.2026.**

**PW -1 (LW -1 )**

**(1-**வது எதிரி ஆஜர் இல்லை**,** பிரிவு **355** பிஎன்எஸ்எஸ் மனு அனுமதி**. 2-**வது எதிரி ஆஜர்**.)** **(**சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்**.)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது வளையெடுப்பு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.06.2019-ம் தேதி அஞ்சலம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த பொழுது எங்களது வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவுப்படி முசிறி காவேரி ஆற்று மணல் திருடுவது மற்றும் கடத்துவது சம்பந்தமாக வந்த உத்தரவின் பேரில் நானும், என்னுடைய உதவியாளரும் முசிறி பவித்திரம் தலைமலை பிரிவு ரோடு அருகே கண்காணித்து கொண்டிருந்த பொழுது TN-22-CY-7134 என்ற EICHER 909 என்ற வாகனம் வந்தது.

அதை நிறுத்தி சோதனை செய்தோம். அதில் 2.5 யூனிட் ஆற்று மணல் இருந்தது. அந்த வாகனத்தின் ஓட்டுநர் பெயர் பழனியாண்டி மகன்

பாலசுப்பிரமணியன் மற்றும் பத்மநாபன் மகன் தனுஷ்பிரபு ஆகியோர்கள் இருந்தனர். நாங்கள் சோதனை செய்யும் பொழுது எங்களது பணியை செய்யவிடாமல் எங்களில் ஒருவரை வண்டி ஏற்றி கொன்றால் தான் பிழைப்பு நடத்த முடியும் என்று சொல்லி அந்த வாகனத்தை எங்கள் மீது மோத முயன்றார்கள்.

நாங்கள் நகர்ந்து கொண்டோம். அவர்கள் பவித்திரம் சாலையில் சென்றுவிட்டார்கள். அந்த வாகனத்திற்கான புகைப்படம் **அ.த.சா.ஆ.1**. அது சம்பந்தமாக நான் கொடுத்த புகார் **அ.த.சா.ஆ.2** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

**<u>எ.த.கு.வி</u> :**

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் எத்தனை வருடங்களாக அஞ்சலம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக இருந்தீர்கள்? |
| **பதில்** | 1.5 வருடங்கள். |
| **கேள்வி** | நீங்கள் பார்த்த நபர்கள் உங்கள் பணி எல்லைக்குள் இருப்பவர்கள் இல்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். அன்றைய தினத்திற்கு முன் அவர்களை நான் பார்த்தது இல்லை. |
| **கேள்வி** | தலைமலை பிரிவு எந்த கிராமத்திற்கு உட்பட்டது? |
| **பதில்** | அஞ்சலம். |
| **கேள்வி** | எவ்வளவு நேரம் அந்த இடத்தில் சோதனைக்காக இருந்தீர்கள்? |
| **பதில்** | சுமார் 2 மணி நேரங்கள். |
| **கேள்வி** | இந்த வாகனத்தை சோதனை செய்வதற்கு முன்பு பின்பு எத்தனை வாகனங்களை சோதனை செய்தீர்கள்? |
| **பதில்** | இந்த வாகனத்தை சோதனை செய்வதற்கு முன்பு சில வாகனங்களை சோதனை செய்தோம். |
| **கேள்வி** | அந்த இடத்திற்கும், முசிறி காவிரி ஆற்று படுகைக்கும் எவ்வளவு தூரம்? |
| **பதில்** | 35 கி.மீ. |
| **கேள்வி** | அன்றைய தினம் உங்கள் இருவரை தவிர வேறு யாரும் இல்லை என்றால்? |
| **பதில்** | இல்லை. |

MADURAI HIGH COURT

| | |
|---|---|
| **கேள்வி** | அந்த வாகனத்தில் மணல் இருப்பது எப்படி தெரிந்தது? |
| **பதில்** | சோதனை செய்த பொழுது தெரிந்தது. |
| **கேள்வி** | நீங்கள் பார்க்கும் பொழுது அந்த மணல் மீது விரிப்பு எதுவும் போடப்பட்டிருந்ததா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | வாகனத்தை பார்க்கும்போதே மணல் இருந்தது தெரிந்தது என்றால்? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அந்த வாகனம் என்ன நிற வாகனம்? |
| **பதில்** | மஞ்சள். |
| **கேள்வி** | அந்த வாகனத்தில் EICHER 909 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதை பார்த்து தான் நான் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அந்த வாகனத்தில் வேறு பெயர்கள் எதுவும் எழுதப்பட்டிருந்ததா? |
| **பதில்** | நான் கவனிக்கவில்லை. |
| **கேள்வி** | அந்த வாகனத்தை எவ்வளவு நேரம் கவனித்தீர்கள்? |
| **பதில்** | 5 நிமிடங்கள். |
| **கேள்வி** | நீங்கள் எந்த பக்கம் இருந்து விசாரித்தீர்கள்? |
| **பதில்** | கிளீனர் பக்கம். |
| **கேள்வி** | நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே வாகனத்தை எடுத்து சென்றுவிட்டார்களா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றீர்கள்? |
| **பதில்** | மாலை 06.00 மணிக்கு. |
| **கேள்வி** | புகாரை கொடுத்துவிட்டு உடனே திரும்பிவிட்டீர்கள்? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | புகாரை பதிவு செய்த பிறகு போலீசார் கையெழுத்து எதுவும் பெற்றார்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | அதன் பிறகு போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்களா? |
| **பதில்** | இல்லை. நான் மகப்பேறு விடுப்பில் சென்றுவிட்டேன். |

MADRAS HIGH COURT

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல் அன்றைய தினம் இந்த வாகனத்தை பார்க்கவில்லை, அந்த வாகனத்தில் மணல் எதுவும் இல்லை என்றாலும், பின்னிட்டு போலீசார் உங்களை காவல் நிலையம் அழைத்து அவர்கள் சொன்னவாறு புகாரை எழுதி அதன் பேரில் எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 03.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 03.07.2026

II ADJ COURT, TRICHY